2015 செப்டம்பர் 15]

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை கேரளா மாநிலத்தில் இருக்கக்கூடிய மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி கிட்டத்தட்ட 25 ஆண்டு காலமாக வால்பாறையிலிருந்து சாலக்குடிக்கு அரசு போக்குவரத்துப் பேருந்து சென்று கொண்டிருந்தது. தற்போது அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது. வால்பாறையிலிருந்து சாலக்குடிக்கு தொடர்ந்து அப்பேருந்து சென்று வருவதற்கும், அத்துடன் வால்பாறையிலிருந்து பாலக்காடு மற்றும் எர்ணாகுளம் போன்ற பகுதிகளுக்கு அரசுப் பேருந்து விடுவதற்குமான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினை என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

266—

ஆயத்த ஆடைகள் மையம்

***37454 திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2015 செப்டம்பர் 15

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தலிலுள்ள எஸ்.எஸ். ஆலை வளாகத்தில் ஆயத்த ஆடைகள் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயரிய இலட்சியங்களை அடைய, துணிச்சல், மன உறுதி மற்றும் தன்னம்பிக்கையோடு செயல்பட்டு, உலகமே தமிழகத்தைத் திரும்பிப் பார்க்கச் செய்யும் ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல், எஸ்.எஸ். மில் வளாகத்தில் ஆயத்த ஆடைகள் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கு, மானாமதுரை தொகுதிக்குட்பட்ட முத்தனேந்தல் கிராமத்தில் தற்போது செயல்படாமல் இருக்கக்கூடிய சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை வளாகத்தில் ஆயத்த ஆடைகள் மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயத்தை அறியாத ஆற்றலே, பூவுலகம் அறிந்த தாயே, ஏழைகளின் இதய மூச்சே, அன்னமிட்ட அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, ரூபாய் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி அளவிற்கு முதலீடுகளைப் பெற்று, தமிழகத்தைத் தொழில் மாநிலமாக ஆக்கியிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதியிலுள்ள முத்தனேந்தலில் இருக்கின்ற

2015 செப்டம்பர் 15]

சோமசுந்தரம் ஆலை கடந்த 1996 ஆம் ஆண்டு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற நிருவாகச் சீர்கேட்டின் காரணமாக மூடப்பட்டது. அதற்குப் பின்னர், 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, அந்தத் தொழிலாளர்களை எல்லாம் அழைத்து, அவர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் 500 ரூபாய் வழங்கி, அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்றினார்கள். அதற்குப் பின்னர் 2006 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வந்தபோது, அந்த உதவித் தொகையையும் நிறுத்திவிட்டார்கள். தற்சமயம் சோமசுந்தரம் ஆலை செயல்படாமல் இருக்கிறது. அதிலிருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் பழுதாகி இருக்கின்றன. அந்த இடமும் சும்மாவாகத்தான் இருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த இடத்தில் மீண்டும் அந்த நூற்பாலையைத் துவக்க வேண்டும் அல்லது அந்த இடத்தில் ஆயத்த ஆடைகள் மையம் தொடங்க வேண்டும். அப்படிச் செய்தால், அந்தப் பகுதியிலிருக்கின்ற தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு வழிவகை இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த இடத்தில் ஆயத்த ஆடைகள் மையம் அமைக்க முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட முத்தனேந்தல் கிராமத்தில் சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை என்ற தனியார் நிறுவனம் 1963 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த ஆலையில் ஏற்பட்ட தொடர் நட்டத்தின் காரணமாக, 1972 ஆம் ஆண்டு ஆலை மூடப்பட்டது. மத்திய அரசு 1977 ஆம் ஆண்டு கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை நியமித்து, அவர்கள் அதை எடுத்து நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டது. இருப்பினும், 1996-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், நிருவாகச் சீர்கேட்டின் காரணமாக அந்த ஆலையை மூடக்கூடிய நிலை ஏற்பட்டது. அந்த ஆலைக்குச் சொந்தமாக 27.2 ஏக்கர் நிலம் உள்ளது.*

வங்கிகளிலே கடன் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அதிலே பணியாற்றிய 186 தொழிலாளர்களையும் அழைத்து, அவர்களுக்கு பண உதவிகளைச் செய்தார்கள். அது, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவியாக இருந்தது. அந்த ஆலை சம்பந்தமான சில வழக்குகளும் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, இன்றைக்கு சிறு, குறு மற்றும் பெரிய முதலீட்டாளர்கள் உட்பட அனைத்து முதலீட்டாளர்களும் தமிழகத்திலே முதலீடு செய்யக்கூடிய நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள். இதுபோன்ற இடங்கள் இருப்பது சம்பந்தமாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதுபோன்ற இடங்களில் தொழில்முனைவோர் வந்து தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அதற்கான ஆயத்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூறி அமர்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதி முழுக்க, முழுக்க விவசாயத்தை நம்பித்தான் இருக்கின்றது. அந்தத் தொகுதியில் வேறு எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை. ஆகவே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று ஆயத்த ஆடைகள் மையத்தை அமைக்க முன்வருகின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்பு கிடைக்க வழி ஏற்படும். அதைப் போல, படித்த இளைஞர்கள் மற்றும் ஏழையெளியவர்கள் அதிகம் வசிக்கின்ற பகுதியாக இருப்பதனால், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த இடத்தில் ஆயத்த ஆடைகள் மையம் அமைப்பதற்கு

2015 செப்டம்பர் 15]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் எல்லாம் தொழில்முனைவோர் தொழில் தொடங்க முன்வருவது இல்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு இராமநாதபுரம் பகுதிகளிலிருந்து மற்றும் துணிநூல் துறை சார்ந்த அதிகளவிலான முதலீட்டாளர்கள் வந்திருக்கின்றார்கள். அதைப் போல, இந்த இடத்திலும் முதலீட்டாளர்கள் முன்வரக்கூடிய நிலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதியிலே உள்ள படித்த இளைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மானாமதுரை என்பது எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்களின் மாறாத எஃகு கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

267—

பூங்காவை மேம்படுத்துதல்

***34794—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—